[5th February 1966

பஞ்சாயத்து யூனியன்களில் கணக்கர்கள்

***116 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் களிலும் அக்கௌண்டண்ட் (Accountant) நியமிக்கப்பட்டுள் ளார்களா, இல்லை என்றால் காரணம் என்ன ?

(இ) ஆம் எனில், வீரபாண்டி பஞ்சாயத்து யூனியனில் (Accountant) நியமிக்கப்படாத காரணத்தால் யூனியன் தணிக்கை நடைபெறுமல் இருப்பது அரசினருக்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் அக்கௌண்டண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சில நிர்வாகக் காரணங்களால், வீரபாண்டி பஞ்சாயத்து யூனியனில் 1964-65-ல் குறைந்த காலத்திற்கு அக்கௌண்டண்ட் பதவி காலியாக வைக்கப்பட்டிருந்தது.

(இ) இல்லை, ஐயா.

UNSTARRED QUESTIONS

Express buses by private operators

1 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the hon. the Minister for Industries be pleased to state the number of express buses run by private operators in the State together with their registration numbers, the routes in which they are plying and the distance of the routes, etc., districtwise?

A.—A statement[a] is appended.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

***2 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

திருசெந்தூர் தாலூகவில்:—

(1) புத்தந்தருவை திட்டம்,

(2) தங்கைக்குளம் சீர்திருத்த திட்டம்,

(3) கால்வாய் நொச்சிக்குளம் திட்டம்,

(4) தென்கரை உபரி ஜலத்தை சடையநேரிக்குளம் வகை எடுத்துச் செல்லும் திட்டம்,

(5) கடம்பாக்குளம் 7-ம் நீர்மடை ஆழங்கால் அபிவிருத்தித் திட்டம்,

(6) சீனிமாவடி Foreshore-*cum*-Drainage Scheme

(7) குலசேகரன் பட்டணம் தருவை வடிகால் திட்டம், முதலியவை எந்த நிலையிலிருக்கின்றன ?

---

[a] Printed as Appendix I on page 777–783